# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

---

**நன்றி**

# தமிழ்

# Literature and hunger

**Dr P.Manikandan** , Assistant Professor, Dept Of Tamil, Dr. Sns Rajalakshmi College Of Arts And Science, Coimbatore -49

***Abstract***

*Since the day man was born, he has been moving his life in search of something. In such a life, it is essential to live in a way that is useful to others. Food is the basis for human survival. This article aims to see how such food and hunger were formed.*

***Key Words***: *Pasippini,Sanga Ilakkiyam, Thirukkural, Manimegalai,Nalvali,Thiruvarurppa*

# இலக்கியங்களும் பசிப்பிணியும்

**முனைவர் ப. மணிகண்டன் ,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எஸ்.என்.எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 631049

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதன் தோன்றிய நாள் முதலே எதேனும் ஒன்றினைத் தேடியே தனது வாழ்நாளினை நகர்த்திக் கொண்டிருக்கின்றான். அத்தகைய வாழ்நாளில் மற்றவர்களுக்கு பயனுள்ள வகையில் வாழ்வது இன்றியமையாத ஒன்று. மனிதன் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக அமைவது உணவாகும். அத்தகைய உணவும் பசிப்பிணியும் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** பசிப்பிணி, சங்க இலக்கியம், திருக்குறள், மணிமேகலை, நல்வழி, திருவருட்பா

**முன்னுரை:**

உடம்போடு கூடிய உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாய் அமைவது பசியாகும். உயிர்கள் கருவானநாள் முதலே உயிருக்கு ஊட்டம் தருவதாக உடல் வளர்ச்சிக்குத் துணையாக இருப்பது உணவாகும். உரிய காலத்தில் உணவினை உண்பது இன்றியமையாததாகும். உணவினை முதலாகக் கொண்டதே உயிர்கள் பெற்றுள்ள உடம்பாகும்.நிலமும் நீரும் விரவிய நிலையில் விளையும் நெல் முதலிய தானியங்களும் காய் கனிகளும் உணவுப்பொருள்களாக அமைகின்றன. இன்று பசிப்பிணியால் பலர் உயிர்த் துறக்கின்ற அவலம் நாளும் அரங்கேருகின்றது. பண்டைய மக்கள் பசிப்பிணியைத் தீர்க்கும் வகையில் இயற்கையோடு இணைந்து மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை

விளைவிக்கும் பொருட்டு நீரையும் நிலத்தையும் முறை செய்து வளம்பெறச் செய்தனர்.இவ்வுலகில் ஒருவரின் பசிப்பிணியைப் போக்குபவர் மக்களில் சிறந்தவர் எனப் பாராட்டப் பெறுவர். இதனை

**"நீரின் றமையாயாக்கைக் கெல்லாம்**

**உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

**உண்டிமுதற்றேஉணவின் பிண்டம் உணவெனப்**

**படுவதுநிலத்தொடுநீரேநீரும் நிலனும்**

**புணரியோர் - ரண்டுஉடம்பும் உயிரும்**

**படைத்திசினோரே" (புறம் - 18)**

எனக் குடபுலவியனார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலின் வழி பசிப்பிணி போக்குவது சிறந்த அறமாகக் கருதப்படுகின்றது. மேலும்

**"அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்**

**பெற்றான் பொருள் வைப்புழி" (குறள் - 226)**

வறியோர் உணவில்லாமல் பசியால் வாடும் பொழுதுபொருளுடையவர்கள் அவர்களுக்கு வேண்டிய உணவினைத் தந்து அவர்தம் பசிப்பிணியை ப் போக்குதல் அறமெனத் திருக்குறள் எடுத்தியம்புகின்றது. உயிர்களின் பண்பு நலன்களும் உடல் இயக்கங்களும் அழிய உயிர்களுக்கு இறுதி தரும் நிலையில் வருவது பசி நோய் ஆதலால் அழிபசி என்கிறது குறள். இதனையே

**"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்**

**பிடித்தகல்விப் பெரும்புணைவிடூஉம்**

**நாணணிகளையுமாணெழில் சிதைக்கும் பூண்முலை**

**மாதரொடு புறங்கடை நிறுத்தும் பசிப்பிணியென்னும் பாவி"**

**(மணிமேகலை 76-80)**

மணிமேகலை பாத்திரம் பெற்ற காதையில் வரும் இவ்வடிகள் மூலம் அறியலாம்.பசி நோயானது மனிதனின் குணங்களை மாற்றக் கூடியது எனவே தான் "பசி

வந்தால் பத்தும் பறந்து போகும்" என்றனர் முன்னோர். பசி நோயானது இவ்வுடம்பின் உள்ளிருந்து உயிர்களின் ஞான ஒழுக்க நற்பண்புகளை அழித்துவிடும் இதனை

**"மானங் குலங்கல்விவண்மைஅறிவுடைமைதானம் தவம்**

**முயற்ச்சிதாளாண்மை— தேனின் கசிவந்த**

**சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும் பசிவந்திடப்போம் பறந்து"**

**(நல்வழி 26)**

என வரும் ஔவையாரின் நல்வழிப்பாடல் புலப்படுத்துகிறது.

**பகுத்துண்ணல்**

சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிறியளவுடைய சோறாயினும் அதனைப் பல உண்கலன்களில் பகுத்துப் பலரோடு உடனிருந்து உண்பான் மேலும் மிகுதியான அளவு சோறாயினும் அதனைப் பல உண்கலன்களிலும் பகுத்துப் பலரோடு உண்பான் அதியமான் நெடுமான் அஞ்சி. தன்னிடமுள்ள உணவுப் பொருளை பசியால் வருந்துவோர்க்கு பகுத்து உண்ணும் உயர்ந்த குணமுடைய சான்றோர்களால் பசிப்பிணி நீங்கியது என்பதை உணரலாம். இதனை

**"சிறுசோற்றானும் நனிபல கலத்தன் மன்னே**

**பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே" (புறம் - 235)**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**பண்ணன்**

ஊண் உடை உறையுள் போன்றவற்றை பெறுதல் வாழ்வின் முதல் நிலையாகும். வயிரார உண்டு மகிழ்தலே அனைவருடைய விருப்பமுமாகும். வள்ளல்கள் பசியால் துன்புறும் எளியவர்களுக்கு வேண்டிய உணவளித்து தங்களை நாடி வந்தவர்களின் வயிற்றுப் பசியினைத் தணிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். பசிப்பிணி போக்கிய பல்வேறு வள்ளல்களை இலக்கியங்கள் வழியே அறியலாம்.வள்ளல் மட்டுமல்லாமல் சிறுகுடிதலைவனான பண்ணன் பசிப்பிணிபோக்கிய செயலினை

**"யான் வாழுநாளும் பண்ணன் வாழிய**

**பாணர் காண்கிவன் கடும்பினதிடும்பையாணர்ப்**

**பழுமரம் புள்ளிமிழ்ந் தன்னஊணொலியரவந்**

**தானுங் கேட்கும் பொய்யாவெழிலி**

**பெய்விடநோக்கிமுட்டைகொண்டு**

**வற்புலஞ் சேரும் சிறுநுண் எறும்பின்**

**சில்லொழுக் கேய்ப்பச் சோறுடைக் கையர்**

**வீறுவீறியங்கும் இருங்கிளைச் சிறாஅர்க்**

**காண்டுங் கண்டும் மற்றுமற்றும் வினவுதுந்**

**தெற்றெனப் பசிப்பிணி மருத்துவனில்லம்**

**அணித்தோ சேய்த்தோ கூறுமினெமக்கே" (புறம்-173)**

*என்ற புறநானூற்றுப் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன இப்பாடலில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவழவன் நாட்டில் உள்ள பண்ணன் என்பவன் பசியால் வருந்திவரும் எளியவர்களுக்கு பெருஞ்சோறு கொடுத்து காத்து வந்தான். பிறர் வறுமையைப் போக்கும் பண்ணனது அறச்செயலைக் கண்டு பாராட்ட எண்ணித்தானும் பரிசில் பெருபவன் போல அவனது இல்லத்திற்குப் புறப்பட்டான். பழுத்த மரத்தின் கண்ணே பறவைக் கூட்டம் ஒலிப்பது போல பண்ணனது இல்லத்தில் பெருந்திரளாக உள்ள மக்களின் ஆரவராம் நெடுந்தொலைவு வரைகேட்டது. மழைபெய்யும் காலத்தை முன்னமே அறிந்து தம் முட்டைகளை மேட்டு நிலத்திற்குக் கொண்டு செல்லும் சிறு எறும்புகளின் வரிசை போன்று பண்ணன் வீட்டில் சிறுபிள்ளைகள் சோற்றுரண்டைகளைக் கொண்டு செல்லும் அழகிய காட்சியை வளவன் கண்டான். பண்ணன் இரவலர் மீது கொண்ட அன்பினைக் கண்டு மனமுருகி"யான் உயிர் வாழும் நாளை தனக்குரிமையாகப் பெற்றுப்பண்ணன் வாழ்வானாக"எனப் பாராட்டி வாழ்த்தினான். பசிப்பிணி மருத்துவனாக விளங்கிய பண்ணனது செயலானது தனக்கெனவாழாப் பிறர் குரியானாக வாழ்தல் இனிது என்பதை புலப்படுத்துகிறது.*

*இன்றைய சூழலில் சமுதாயத்தில் உள்ள பல்வேறு தகாதசெயல்களுக்குத் தன்னலம் பற்றிய மிகுதியான உணர்வும் பொதுநல உணர்வு இல்லாமையுமே அடிப்படைக் காரணமாகும். இந்த உலகம் இயங்குவதே பொதுநலம் என்ற உயர்ந்த எண்ணத்தால் மட்டுமே*

ஆகும். இதனை சங்ககால மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். தன்னலங் கருதாது பொதுநலத்தோடு வாழ்ந்தனர்.

பொதுநலம் என்பது தனியாக உண்ணாமல் உள்ளதைப் பகிர்ந்து உண்ணுதல். அது அமுதமாக இருந்தாலம் கூட யாரையும் வெறுக்காத அன்பு தீயவைக்கு அஞ்சுதல் புகழ் என்றால் உயிரையும் தருவது பழி என்றால் உலகையே பரிசாகத் தந்தாலும் செய்யாதிருத்தல் என்று வாழ்ந்தனர்.இன்று சமூகத்தில் நடக்கும் வழிப்பறி கொலை கொள்ளை லஞ்சம் தான் உயர வேண்டும் என்பதற்காக மற்றவர் நலன் பற்றிக் கவலைப்படாது வாழும் மக்களின் தன்னலப் போக்கே ஆகும்.

**"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**

**அமிழ்தம் இயைவதுஆயினும் இனிதுஎனத் தமியர்**

**உண்டலும் இலர் முனிவிலர் துஞ்சலும் இலர்;**

**பிறர் அஞ்சுவதுஅஞ்சிப் புகழ் எனின்**

**உயிரும் கொடுக்குவர் பழிஎனின் உலகுடன்**

**பெறினும் கொள்ளலர் அயர்விலர் அன்னமாட்சி**

**அனையர் ஆகித் தமக்குஎனமுயலா**

**நோன்தாள் பிறர்க்குஎன**

**முயலுநருண்மையானே" (புறம் 182)**

இப்பாடல் வழி உயர்ந்த பண்புகளைக் கொண்டு தமக்காக வாழாமல் பிறர்க்காக வாழ்கின்ற முன்னோர்கள் பலர் இருந்ததால் தான் இவ்வுலகம் இருக்கிறது. எனவே சமூகத்தில் தன்னலம் விடுத்து பொதுநலம் பேண வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்குகின்றது என்பதை அறியலாம

சங்கச் சான்றோர்கள் இனிய உணவுகளைப் பெற்ற போது அவற்றைத் தாமே தனித்து உண்ணாமல் மற்றவர்களுடன் பகுத்துண்ணும் உள்ளத்தால் நாட்டுமக்களது பசிப்பிணியை நீக்கும் பேராண்மை படைத்தவர்களாகத் திகழ்ந்தனர். இதனை

**''உலகத்தோரேபலர்மற் செல்வர்**

**எல்லாருள்ளுநின் னல்லிசைமிகுமே**

**.............................................................**

**இனியவைபெறினேதனிதனிநுகர்கேம் தருகென**

**விழையாத் தாவினெஞ்சத்துப் பகுத் தூண் டொகுத்த**

**வாண்மைப் பிறர்க்கெனவாழ்திநீயாகன் மாறே"(ப.பத்து -38)**

என்ற பதிற்றுப்பத்துப் பாடலடிகள் வழி அறியலாம்.

வறியவர்களுக்குப் பகுத்துண்ணும் அறச்செயல் மன்னர்கள் முதலிய பெருஞ் செல்வர்களால் மட்டுமின்றி ஏழை எளிய மக்களாலும் நாளும் மேற்கொள்வது எளிமையானதே இதனை, **"யாவர்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி"** (திருமந்திரம் 252)

என்ற திருமந்திரப் பாடலடிகள் உணர்த்துகின்றது.

பசித்தோர்க்கு உணவளித்தலின் இன்றியமையான்மையை வள்ளலார் அவர்கள் தமது சீவகாருண்ய ஒழுக்கம் எனும் நூலில் பசியினால் வரும் துன்பத்தைப் போக்குவது பேரின்பமாகும். அது அனைத்துப் பிறவிக்கும் நன்மை தரும் என்கிறார்.வாடியபயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடினார். பசியால் இளைப்புற்று வீடுதோறும் பிச்சை பெறுவோரைக் கண்டு உள்ளம் வெதும்பினார். உலகில் ஏழைமக்கள் பசியால் வாடுவதைக் கண்டு துடித்தார்.பசியால் ஏற்படும் நிலையினை

**"வாடியபயிரைக் கண்டபோதெல்லாம்**

**வாடினேன் பசியினால் இளைத்தேவீடுதோ**

**நிரந்தும் பசியறாதயர்ந்த**

**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்" (3471)**

**எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே**

**இலகிய இறைவனேஉலகில்**

**பட்டினியுற்றோர் பசித்தனர் களையால்**

**பரதவிக்கின்றனரென்றே**

**ஒட்டியபிறரார் கேட்டபோதெல்லாம்**

**உளம் பகீரெனநடுக்குற்றேன் இட்ட**

**இவ்வுலகிற் பசியெனில் எந்தாய்**

**என்னுளம் நடுக்குவதியல்பே" (34 31)**

என வரும் திருவருட்பா பாடல்கள் மக்கள் பசிப்பிணியால் அடையும் துன்பத்தையெண்ணி வருந்தியதை உணர்த்தும். பசிப்பிணியைப் போக்க சத்திய தரும சாலையை நிறுவி பசிப்பிணி மருத்துவராகத் திகழ்ந்தார்.உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு உள்ளம் இரங்கி அவற்றின் துன்பங்களைப் போக்க முற்படும் உயரிரக்க உணர்வானது ஆறறிவு படைத்த மக்களுக்கு இன்றியமையாததாகும். இன்றைய நாகரீகச் சூழலில் பசிப்பிணியில் பலர் இருப்பதைக் காணும் பொழுது தம்மால் இயன்றளவு அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதை சங்ககால வாழ்வியல் உணர்த்துகின்றது.

சமூகத்தில் இன்று தன் மனைவி தன் பிள்ளைகள் தன் குடும்பம் என்றுவாழ்க்கைப் போக்கே மேலோங்கி இருக்கின்றது. தன் அடுத்த தலைமுறைக்கும் சொத்துக்களைச் சேர்க்கும் ஆசைதான் உள்ளது. ஆனால் சங்ககால மக்கள் பெருமிதவாழ்வு வாழ்ந்தனர். வறுமையிலும் செம்மையாக நேர்மையாக வாழ்ந்தனர். இதனை

**"வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்**

**எல்லோர்க்கும் கொடுமதிமனைகிழவோயே" (புறம் 163)**

தான் பெற்ற பரிசிலோடு மனையகம் வந்த புலவன் தன் மனையாழிடம் உன்னை விரும்புகின்றவர்க்கும் சுற்றத்தார்க்கும் நாம் பசித்தகாலத்தில் நமக்கு உதவி நாம் திரும்பக்கொடுப்போம் என எதிர்பார்ப்போர்க்கும் யாருக்குக் கொடுக்க வேண்டும் என எண்ணாமல் பெற்ற பொருளை நாமே வைத்துக் கொண்டு நீண்டநாள் வாழலாம் எனக் கருதாமல் எல்லோருக்கும் கொடு என்று கூறினான். இந்ததன்னலமற்ற சிந்தனை இன்றைய சூழலில் எதிர்பார்ப்பது கடினமே எனினும் இச்சிந்தனை உருவாக வேண்டும்.

**துணை நின்ற நூல்கள்**


1. புறநானூறு மூலமும் உரையும் நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிட் சிட்கோ சென்னை 98
2. எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும் -சாமி சிதம்பரனார் அறிவுப் பதிப்பகம், இராயப்பேட்டை சென்னை-14
3. தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மரபும் திறனும் - ஆ.மணி திருவல்லிக்கேணி, சென்னை-05 லாவண்யா பதிப்பகம்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com